# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.1/2026

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரேகாராணி | Husband's Name | : | சரவணன் |
| Village | : | திருத்துறைப்பூண்டி | Taluk | : | திருத்துறைப்பூண்டி |
| Calling | : | | Age | : | 51 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 24th day of February 2026.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருத்துறைப்பூண்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.05.2024 அன்று காலை 6.00 மணிக்கு நான் நன்னிலம் காவல் ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்தபோது உதவி ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன் நிலையம் ஆஜராகி அ.சா.ஆ.1 தனியறிக்கையுடன் சா.பொ.1, சா.பொ.2 யை என்னிடம் ஒப்படைத்தார். அதனடிப்படையில் நன்னிலம் காவல் நிலைய கு.எண் 128/2024, பிரிவு 25 (1-A) Arms Act ன்படி எதிரிகள் மீது நான் பதிவு செய்த

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.02.24 16:21:06 +0530

முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.4**. 6.30 மணியளவில் காவலர்கள் 1464 வெங்கடேஷ் மற்றும் 1029 சரவணன் ஆகியோர் முன்னிலையில் 1ம் எதிரி விக்னேஷ் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதில் எங்களை மாப்பிளைகுப்பம் EB ஆபீஸ் அருகே நன்னிலம் போலீசார் மூன்று பேர் எங்கள் வண்டியை மறைத்து சோதனை செய்து எங்களிடம் விசாரித்து நாங்கள் வைத்திருந்த ஆயுதத்தை ஒரு மகஜரில் கைப்பற்றியும் பின்னர் எங்கள் இருவரையும் நாங்கள் பயன்படுத்திய வாகனம் மற்றும் எனது மைத்துனர் பிரசாத்தை வெட்ட வைத்திருந்த அருவாளுடன் நன்னிலம் காவல் நிலையத்தில் அழைத்து வந்து தங்களிடம் ஒப்படைத்தனர் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.5**. அன்றைய தினமே காலை 9.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செந்தில்குமார், தமிழ்வாணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.6**. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7**. சா.பொ.1, சா.பொ.2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.8**. 05.05.2024 அன்று உதவி ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன், 2ம் நிலை காவலர் வெங்கடேஷ், முதல்நிலை காவலர் சரவணன் மற்றும் சாட்சிகள் செந்தில்குமார்,

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:21:11 +0530

தமிழ்வாணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து 28.05.2024 அன்று எதிரிகள் மீது பிரிவு 25 (1-A) Arms Act ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் கண்ணுற்ற சாட்சிகள் காவல் நிலையத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் திறந்தவெளி என்றால் சரி. நன்னிலம்-மாப்பிள்ளைகுப்பம் மெயின்ரோடு கனிசமான போக்குவரத்து உள்ள பகுதி என்றால் தவறு, அதிகாலை நேரம் என்பதால் போக்குவரத்து குறைவாக இருக்கும். அன்றைய தினம் ரோந்து பணியில் ஈடுபடவில்லை என்றால் தவறு. அவ்வாறு ஈடுபட்டிருந்தால் போக்குவரத்து குறித்து குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் தவறு. இவ்வழக்கில் 1ம் எதிரியின் தங்கையின் கணவர் பிரசாத்தை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் அவர் இந்த வழக்கிற்கு தேவைப்படவில்லை என்பதால் விசாரிக்கவில்லை. அருவாளிற்கும் வீச்சருவாளிற்கும் வித்தியாசம் தெரியும் என்றால் சரி. கத்திக்கும் ஆடு வெட்டும் கத்திக்கும் வித்தியாசம் தெரியும் என்றால் சரி. பார்வை மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து வித்தியாசமாக

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:21:16 +0530

உள்ளது என்றால் தவறு. வழக்காவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் அனைத்தும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் தவறு. சொன்ன தேதி, இடத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றால் தவறு. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.24 16:21:22 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.